13th November 1957]

THE HON. SRI V. RAMIAH : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration of the Regional Transport Authority, Coimbatore.

SRI P. G. MANICKAM : ஸார், பொதுஜனங்களால் இந்த இரண்டு பஸ் ரூட்டுகள் கேட்கப்பட்டது. அதில் ஒரு பஸ் ரூட் அதாவது சத்திய மங்கலத்திலிருந்து ஈரோடுக்கு போகிற ரூட் கொடுப்பதற்கு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருவதற்கு பாராட்டுகிறேன். ஆனால் அதே மாதிரி மிக அவசியமாக இருக்கிற அந்தியூர்-திருப்பூர் ரூட்டுக்கு என் பெர்மிட் கொடுக்கவில்லை என்று தெரியவில்லை. இது மிக அவசியமான ரூட் ஆனதால் இதற்கு உடனடியாக சர்க்கார் உத்தரவு போடுமா ?

THE HON. SRI V. RAMIAH : The hon. Member's question refers to a different route altogether.

Cottage Industries

* 156 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any survey of the existing Cottage Industries in our State has been done so far ; and

(*b*) if so, the details thereof and the extent to which employment of personnel is involved in each?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Two detailed Surveys of Cottage Industries in this State were conducted one in 1927–28 and the other in 1952–54. The first survey included all classes of cottage and rural industries carried on in the houses of workers both in the rural and urban areas. The second survey was conducted by a Special Officer appointed by the Government with the object of making an intensive study and development of certain select cottage industries in select firkas and the survey report was prepared by the Department of Statistics and the publication is available for sale at the Government Press, Madras. Particulars regarding the number of workers engaged in each industry are given in Appendix VII in Part I of Volume III of the Census Report, 1951, which is also available for sale at the Government Press.

SRI A. A. RASHEED : May I know from the Hon. Minister whether the leather industry has been classified under 'Cottage Industries '?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think that comes under the category of ' select cottage industries '.

SRI S. LAZAR : ஸார், ஒவ்வொரு ஜில்லாவில் இருக்கும் இண்டஸ்ட்ரீஸ் ஆபீஸர்களிடம் ஆங்காங்கு இருக்கக்கூடிய குடிசைத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று கேட்டால் எங்களிடத்தில் ஒன்றுமில்லை சர்க்காரிடத்தில்தான் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அது உண்மைதானா ? அப்படியென்றால் ஆங்காங்கு இருக்கக்கூடிய பல குடிசை தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு தக்க உத்தரவுகள் பிறப்பிக்குமா ?

9-10 a.m. THE HON. SRI M. BHAKTAVATSALAM : புதிதாக பல கைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் கவனித்துத்தான் வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதாவது உருப்படியான யோசனைகளை சர்க்காருக்கு தெரிவித்தால் அதைப்பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு பரிசீலிக்கலாம்.

SRI K. SATTANATHA KARAYALAR : தற்சமயம் இந்த ராஜ்யத்தி லுள்ள பிரதான குடிசைக் கைத்தொழில்கள் யாவை ? அவைகளில் அபிவிருத்தியடையவேண்டிய குடிசைத் தொழில்களாகக் கருதப்பட்டு பாதுகாப்புக் கொடுக்கப்படும் தொழில்கள் எவை எவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குடிசைத் தொழில் களுக்கு ஓரளவு நம் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டுத்தான் வருகிறது. இப்போது நாம் பாதுகாப்புக் கொடுப்பதற்கு எடுத்துக்கொண்டுள்ள முக்கிய மான தொழில்களில் சேலத்திலும், கோயம்புத்தூரிலும் silkworm rearing and spinning ; தஞ்சாவூரில் brass, bronze, metalware and cutlery ; ராமனுதபுரத்தில் conch shell work and palmyra products, mat and reed products.

SRI K. SATTANATHA KARAYALAR : 'சில்க்வர்ம் ரீரிங்' என்ற குடிசைக் கைத்தொழில் சம்பந்தமாக எந்த எந்த இடங்களில் என்ன என்ன திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சேலத்தில் ஹோசூ ருக்குப் பக்கத்திலும், கோயம்புத்தூர் ஜில்லாவில் கோபிசெட்டிப்பாளையம் தாலூகாவிலும் இந்தக் கைத்தொழில் கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI R. KRISHNASWAMI NAIDU : ஒவ்வொரு ப்ளாக் பிரதேசத் திலும் 10 'க்ரூப்'-கள் இருக்கின்றன. ஒவ்வொரு க்ரூப்பிற்கும் கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தமாக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. ப்ளாக் லெவலில் ஒரு குடிசைக் கைத்தொழில் அதிகாரியும் இருக்கிறார். ஒவ்வொரு க்ரூப்பிலும் சில குடிசைக் கைத்தொழில்களைச் செய்து கொண்டிருக்கும் மக்கள் தங்களுக்கு சர்க்கார் கடன் உதவி செய்யவேண்டு மென்று கோரும் மனுக்களை, கடன் கொடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள ரெவின்யூ இலாகாத் தாசில்தாரிடம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், மனுதார்களுக்கு நிலப் பட்டா இல்லை—நிலம் இல்லை—என்ற காரணத் தால் அவர்களுடைய கோரிக்கைகளை தாசில்தார்களும், மற்ற சிப்பந்திகளும் நிராகரித்திருக்கிறார்கள். இம்மாதிரி நூற்றுக்கணக்கான மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக, அந்தத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் கடன்களைப் பெறுவதற்கு என்ன செய்யவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் யோசனை சொல்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது சம்பந்தமாக கனம் அங்கத்தினர் கொஞ்சம் விவரங்கள் தெரிவித்தால் அவைகளை கவனித்து வேண்டியதைச் செய்கிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : ராமனுதபுரத்திலிருந்த பனைப் பொருள் விற்பனைச் கூட்டுறவுச் சங்கத்தில், உற்பத்தியாகும் பனைப் பொருள்கள் லாபகரமாக விற்காமலிருந்த காரணத்தினால், அந்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் இப்போது நடக்கவில்லை என்பது உண்மையா ? அதை யொட்டியே சேலத்திலுள்ள பனைப் பொருள்கள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கமும் கலைக்கப்பட்டது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி இப் போது என்னிடம் தகவல் இல்லை. இது சம்பந்தமாகத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்வேன்.

13th November 1957]

Sri K. B. S. MANI : சிறு கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக தஞ்சாவூர் ஜில்லாவில் 'காப்பர் ஒர்க்ஸ்'-ம், 'ஐர்ன் ஒர்க்ஸ்'-ம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு இந்த வருஷத்திய 'காப்பர்' கோடாவும், இரும்புக் கோடாவும் சரியானபடி வழங்கப் படவில்லை என்று அரசாங்கத்திற்கு புகார்கள் வந்திருக்கின்றனவா ? புகார்கள் வந்திருந்தால், சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படிப்பட்ட தகவல் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை. கனம் அங்கத்தினர் இது பற்றி குறிப் பாகத் தெரிவித்தால் அதை கவனிக்கலாம்.

Sri M. JAGANNATHAN : ஹரி ஜனங்களின் பொருளாதார முன் னேற்றத்திற்கு குடிசைத் தொழில்கள் மூலமாக சர்க்கார் என்ன நட வடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஹரிஜனங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் பிரத்தியேகமாகவே ஹரிஜன கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவைகள் மூலம் சிறு சிறு கைத் தொழில்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

Sri V. K. KOTHANDARAMAN : வட ஆற்காடு ஜில்லாவில் கூட்டுறவு முறையில் தீப்பெட்டித் தொழிற்சாலையை அமைப்பதற்காக பாங்கியில் பணம் கட்டி, அனுமதி வேண்டுமென்று கேட்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது. இன்னும் அது சம்பந்தமாக அனுமதி கொடுக்கப்படவில்லை. சர்க்கார் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தீப்பெட்டித் தொழிற்சாலைகளை அதிகமாக வைப்பதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகையால்தான் இவைகளை அமைப்பதில் தாமதம் ஏற்படுகிறது. வேறு தொழிலை அமைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

Sri M. C. MUTHUKUMARASWAMY : தஞ்சாவூர் ஜில்லாவில் வெங்கலம் (ப்ரான்ஸ்) குடிசைத் தொழில் நடப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது அங்கே எத்தனை இடங்களில் நடந்து வருகிறது ? அது நடத்தப்படும் இடங்களில் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டுமென்று சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது சம்பந்தமாக தனிக் கேள்வி போட்டால் அவை எத்தனை என்று கணக்கிட்டுச் சொல் கிறேன்.

Sri K. R. NALLASIVAM : ஒன்று இரண்டு வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கே சர்க்காரால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இன்னும் பணம் கொடுக்கப்படவில்லை. புதி தாக ஆரம்பிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்காவது உடனடியாகப் பணம் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஏற்கெனவே ஆரம் பிக்கப்பட்ட தொழில்களுக்கும், புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில்களுக் கும் எந்த அளவு உதவி அளிக்க முடியுமோ அந்த அளவு உதவியை சர்க்கார் அளித்துத்தான் வருகிறார்கள்.

Sri A. VEDARATHNAM PILLAI : நாகப்பட்டினம் தாலூக்காவி லுள்ள காரப்பிடாகை என்ற ஊரில் மரத்திற்கு வர்ணம் பூசும் (வாக்ஸ் கலரிங்) தொழில் ரொம்ப நாட்களாக நடந்துவந்து, இப்போது அது அழிந்துகொண்டிருக்கிறது. அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று திட்டக் கமிட்டி கூட்டங்களில் பல முறை எடுத்துச் சொல்லி யும் கவனிக்கப்படவில்லை. அதை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

[13th November 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொறுக்கி யெடுக்கப் பட்டுள்ள சில தொழில்களைத் தவிர வேறு தொழில்களையும் நல்ல முறை யில் நடக்கச் செய்யவேண்டுமென்றுதான் அரசாங்கத்தின் ஆவல். நாகப் பட்டினத்திலுள்ள இந்தத் தொழிலைப்பற்றி கனம் அங்கத்தினர் இன்னும் கொஞ்சம் விவரங்கள் தெரிவித்தால் அவைகளை கவனித்து நான் வேண் டியதைச் செய்கிறேன்.

SRI M. JAGANNATHAN : அப்பளம் செய்யும் தொழிலும் அரசாங்கம் ஆதரிக்கும் குடிசைத் தொழில்களில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ? நம் ராஜ்யத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எத்தனை பேர் என்ற தகவலையும், எந்த எந்த நாடுகளுக்கு அப்பளம் ஏற்றுமதி செய்யப் படுகிறது என்ற தகவலையும் கனம் அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்பளம் செய்வ தும் அவைகளில் சேர்க்கப்பட்டுத்தான் இருக்கிறது. அப்பளத்தைப்பற்றி நாம் அலட்சியமாக நினைப்பதற்கில்லை. ஏழை மக்கள் கஞ்சி உண்ணுவதால் அத்துடன் உளுந்து சேர்ந்த அப்பளத்தை எண்ணைச் செலவுகூட இல்லாமல் சுலபமாக சுட்டுச் சாப்பிடலாம். அப்பளத்தில் சத்தும் இருக்கிறது. இந்தத் தொழிலில், ஏற்றுமதியைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியதில்லை. நாட்டில் எல்லோரும் அப்பளம் சாப்பிட வேண்டுமென்பதுதான் சர்க்காரின் எண்ணம். ஆகவே அப்பள ஏற்று மதியைப்பற்றி கவனிக்கவேண்டியதில்லை. இந்தத் தொழில் சம்பந்தமாக எத்தனை யூனிட்டுகள் இருக்கின்றன என்ற தகவல் இப்போது என்னிடம் இல்லை.

SRI S. NAGARAJA MONIGAR : Sir, may I know whether a report regarding the progress so far made in this connexion as well as the proposed scheme for the coming year will be made available to the Members of the House ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Member can put a separate question, I shall see what particulars could be laid on the table of the House.

SRI K. ANBAZHAGAN : அப்பளம் செய்வதையாவது பிற நாட்டார் எளிதில் கற்றுக்கொள்ள முடியும். தளிர்வடம் போடுவதை பிறர் கற்றுக் கொள்ள முடியாது. தளிர்வடம் போடும் தொழிலை இந்தத் திட்டத்தில் அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சுலபமாகச் செய்யக் கூடியதும், ஆரம்பிக்கக்கூடியதுமானது அப்பளம் செய்யும் தொழில். ஆகவே அப்பளத் தொழிலில்தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

Ramakrishna Vidyalaya, Perianaickenpalayam

* 157 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri V. K. Ramaswamy Mudaliyar) : Will the Hon. the Minister for Finance be pleased to state the amount given last year as grant by (i) the State Government and (ii) the Central Government to the Ramakrishna Vidyalaya at Perianaickenpalayam?

THE HON. SRI C. SUBRAMANIAM : During 1956–57, the Vidyalaya was paid by the State Government Rs. 1,39,964–11–0 (made up of Rs. 59,500 for Five-Year Plan schemes and Rs. 80,464–11–0 for non-Plan schemes) and by the Central Government Rs. 2,85,932–8–0 (made up of Rs. 2,76,410 for Plan schemes and Rs. 9,522–8–0 for non-Plan schemes).